2002 மே 8]

வழக்குகள் தேங்கியிருக்கின்றன. அதிலே உயர் நீதிமன்றத்திலே மட்டும் 3-1/2 இலட்சம் வழக்குகள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அகில இந்திய ரீதியில் ஒப்பிடும்போது உதாரணத்திற்கு உயர் நீதிமன்றங்களை எடுத்துக் கொண்டாலே, அலகாபாத் உயர்நீதிமன்றத்திலே மட்டும் 12 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன, தேக்கமடைந்திருக்கின்றன. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் 3-1/2 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலத்தில் குறைவாகத்தான் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி திரு. B.N. கிர்பால் அவர்கள் விரைவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது சரி என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் தேங்கிக்கிடக்கிற வழக்குகளைப் பொறுத்தவரையில் வயது முதிர்ந்தவர்கள் போட்ட வழக்குகள் நிலுவையில் அதிகமாக இருக்கின்றன. அந்த வழக்குகளில் தீர்ப்பு வருவதற்கு முன்பு இயற்கை எய்தும் சூழ்நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களின் வயது அடிப்படையில் வழக்குகளை விசாரிக்க, வயது முதிர்ந்தவர்களின் வழக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 310, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

310—

கோயிலைப் புதுப்பித்தல்

***12390—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு ஏதேனும் நிதி ஒதுக்கியதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு நிதி ஏதும் ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் கோயில் குடமுழுக்கு 15-3-2001 அன்று நடத்தப்பட்டது. அப்போது கோயிலிலே சின்னச் சின்ன வேலைகள் புதுப்பிக்கப்பட்டன. ஆனால் அந்தக் கோயிலுக்கு மிக முக்கியமான மதிற்சுவர்கள் உடைந்து மரங்கள் எல்லாம் சாய்ந்து அந்த வழியாக, விரும்பத்தகாத மிருகங்கள் எல்லாம் உள்ளே சென்று, கோயிலை அசிங்கப்படுத்துவது என்பது அரசுக்குத் தெரியுமா? அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படியிருந்தால், கோயிலின் சுற்றுப்புறத்தைச் சுகாதாரமான முறையில் வைத்துக்கொள்ள அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா? உடைந்த மதிற்சுவரைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலில் பல ஆண்டுகளாக முழுமையான திருப்பணி நடைபெறாமல் இருந்தது. ஒரு கோடியே 38 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முழுமையான திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. இத்தொகையில் திருக்கோயில் நிதியாக 84 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான திருப்பணியும் உபயதாரர்கள் மூலம் 44 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருப்பணியும் செய்து முடிக்கப்பட்டன. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம், பொதுநல நிதியிலிருந்து 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டு, திருப்பணிகள் அனைத்தும் முடிவடைந்து, 15-3-2001 அன்று ஆன்றோர்கள், சான்றோர்கள் முன்னிலையில் குடமுழுக்கு சீரிய முறையில் நடைபெற்றது. எனவே நிதியுதவி செய்ய வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மதிற்சுவர்கள் எல்லாம் உடைந்துள்ளதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஆலயங்களில் எங்கெங்கு மதிற்சுவர்கள் உடைந்து இருக்கின்றனவோ, அவற்றுக்கெல்லாம் இப்போதுகூட பணிகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு அப்படி மதிற்சுவர்கள் உடைந்ததாகத்

2002 மே 8]

தெரியவில்லை. இருந்தாலும், அதை உடனடியாகப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோயிலுக்குள் மிருகங்கள் செல்வதாகச் சொன்னார்கள். அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயத்திற்கு, அங்கே எடுக்கப்படும் மாடுகள், பசு மாடுகள், ஆலயத்திற்கு உள்ளே சென்று பாதுகாப்பாகக் கட்டி வைக்கப்படுகின்றன. அந்த மிருகங்கள்தான் செல்லுமே தவிர, தெருவிலே திரிகின்ற மிருகங்கள் செல்லாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்று சொன்னதாக, மாண்புமிகு அமைச்சர் கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. நண்பர் ஞானசேகரன் அவர்கள் குழுவிலே சென்று நேரிலே பார்த்திருக்கிறார். என்னிடத்திலேயும் சொல்லியிருக்கிறார். மதிற்சுவர் உடைந்து, மாடுகள்—அங்கே இருக்கக்கூடிய மாடுகள்—சென்று வருவது புண்ணியம்; நான் மாடுகள் எனச் சொல்லவில்லை; விரும்பத்தகாத மிருகம் என்பது பன்றி. அதைத்தான் நான் சொன்னேன். அங்கு அதிகமாக மேய்கிறது. ஆகையால் கோயிலைப் புனிதத் தலமாக நினைத்து ஆசியா கண்டத்திலேயே மிக உயரமான, பல கோடி ரூபாய் செலவு செய்து, நம்முடைய முன்னோர்களும், சான்றோர்களும், நல்ல அறிஞர்களும், ஆன்மீகவாதிகளும் கட்டிக் கொடுத்த கோயிலைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து, அந்தக் கோயில் மதிற்சுவரைக் கட்டுவீர்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்டுவேன் என்று சொல்லிவிட்டார்களே! (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றி மேயாது; பன்றி மேய்வது கிடையாது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்வேறு ஆலயங்களில் மதிற்சுவர்கள் உடைந்துள்ளதாகச் சொன்னார்கள். ஸ்ரீரங்கத்திலே இருக்கின்ற ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில், மதிற்சுவர் உடைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பகுதியில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்குமேயானால், உடனடியாக அந்த மதிற்சுவர்களைக் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கை

எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பன்றிகள்—இங்கே மட்டுமல்ல—நிச்சயமாக, ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்குச் சென்று இருக்காது. ஆனால் அங்கே, வெளியிலே, எல்லா ஆலயங்களின் பக்கத்திலேயும் அப்படிப்பட்ட பன்றிகள் சுற்றித் திரிந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே அங்கே, ஆலயத்திற்குள் நிச்சயமாக அவை செல்லாது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 311, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

311—

குடிநீர்

***7374—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம், மலையடிப்பட்டி பகுதியில், குடிநீர்க் குழாய் பதிக்கப்படாத இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டி பகுதிக்கு, புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்மூலம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும், புதிய பகிர்மானக் குழாய்கள் அமைக்கின்ற பணியும், துறையின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டம் நிறைவுற்றதற்குப் பின்பு, குடிநீர் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு திருப்திகரமான பதிலைத் தந்தார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது இராஜபாளையம் தொகுதியில், குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும்வகையில், நகரின் மேற்கே, அய்யனார் கோயில் செல்லும் சாலையில், ஆறாவது மைலில் 30